பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## பதவிவிலகுமாறு பிமலுக்கு அழுத்தம்

கொழும்பு, ஜூலை 5
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உடனடியாகப் பதவி விலகவேண்டும் 11

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 220


சனிக்கிழமை
05 ஜூலை 2025

ஆனி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

செம்மணிப் புதைகுழியில்

# தொடர்ச்சியாக மீட்கப்படும் சிறுவர்களின் சிதிலங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து கடந்த சில நாள்களாக, சிறுவர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படும் மனிதச் சிதிலங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன. 11



## இன்று ஜூலை - 5 கரும்புலிகள்நாள்



யாழ்ப்பாணம், ஜூலை 5
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பால் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படும், கரும்புலிகள் நாள் இன்றாகும். இதனை அனுஷ்டிக்கும் வகையில் புலம்பெயர் நாடுகளில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. 11

பருத்தித்துறை சாலையின்

## பேருந்து விபத்து; 15 பயணிகள் காயம்

சிலாபத்தில் சம்பவம்

விரிவு பக்கம்:- 11

## யாழில் மலேரியா!

யாழ்ப்பாணம், ஜூலை 5
உடற்சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனாவில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவருக்கு மலேரியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா வெளியிட்டுள்ள ஊடக 11

வடமராட்சியில்

## 71 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 71 கிலோ 400 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
கடற்படையி 11

## மக்களின் வாழ்வுரிமையை பறித்துள்ளது அரசாங்கம்!

நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 5
செம்மணிப் புதைகுழி தொடர்பில் உரையாற்றும் அரசாங்கம் மக்களின் வாழும் உரிமைகளைப் பறித்துள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சதெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இந்தப் பழியை 11

வவுனியாவில்

## 'ஹைஏஸ்' மோதி முதியவர் சாவு!



வவுனியா, ஜூலை 5
வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஹைஏஸ் - சைக்கிள் விபத்தில், முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு அருகாகவே 11

'முந்தி
இந்தநாளெண்டால்
ஆமிக்காரருக்கு
கெடிகலங்கி பேதிபோகும்
கண்டியளோ'

## காய்ச்சலால் குழந்தை பலி

உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 5
காய்ச்சல் காரணமாக ஒன்றரை வயது ஆண் குழந்தையொன்று நேற்றுப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.
அச்சுவேலி வடக்கு பகுதியைச் சேர்ந்த அந்தோனிராஜன் கனிஸ்ரன் என்ற 11



முள்ளிவாய்க்காலில்

## தேரின் முடிக்கலசம் வீழ்ந்து பெண்ணொருவர் துயரச்சாவு

முல்லைத்தீவு, ஜூலை 5
முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடி பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழாவின் போது, தேரின் கலசம் வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சசிகலா (வயது -55) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இன்னொரு பெண் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 11

## கல்விச்சுற்றுலாவில் புறக்கணிப்பு; நீதிகோரி மாணவன் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 5
வவுனியாவில் உள்ள பாடசாலையொன்றால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்விச் சுற்றுலாவில், தான் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அந்தப் பாடசாலை மாணவன் ஒருவன் போராட்டத்தில் ஈடுபட்டான்.
குறித்த பாடசாலையால் திருகோணமலை மாவட்டத்துக்குக் கல்விச் சுற்றுலாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடப் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4122 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 34 37 44 78 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1189 |
| வெற்றி இலக்கினம் | தும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 27 38 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0148 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 2 2 2 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2227 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கங்கள் | 25 65 69 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5880 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 6 4 2 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1910 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 12 19 57 59 |
| விசேட எழுத்து | R |

# செம்மணி மனிதப் புதைகுழி தமிழரின் வலியைப் பேசுகிறது

## பிரிட்டன் எம்.பி. தெரிவிப்பு

**லண்டன், ஜூலை 5**

**செம்மணியில் அகழப்படும் மனிதப் புதைகுழி, தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக அனுபவித்த வலி மற்றும் மௌனத்தைப் பேசுகின்றது என்று பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் டேம் சியோபைன் மெக்டோனா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2021ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐ.நா. தீர்மானம் 46/1 இன்படி, இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்க, ஒருங்கிணைக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் பாதுகாக்க சர்வதேச சமூகத்திற்கு அதிகாரம் உள்ளது. ஐ.நா. தான் கொண்டுள்ள ஆணையைப் பின்பற்ற வேண்டிய நேரம் இது.

செம்மணிப் படுகொலையின் குற்றவாளிகள் மற்றும் அதைப் போன்றவர்கள் அடையாளம் காணப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்ய இப்போது ஒரு சர்வதேச விசாரணை தொடங்கப்படவேண்டும்.

இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் உள்ளபடி, இது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை | 0588 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| T | 8 7 6 1 0 9 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2854 | N | 03 27 30 67 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 03 32 45 77 | 5015 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0718 | 27 34 39 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♎ | 03 06 15 56 | 4566 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 17 | 11 36 47 73 | 2030 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.07.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 56 60 74 75 | 2680 |

# சந்திரசேன கைது



கொழும்பு, ஜூலை 5

கடந்த அரசாங்கங்களின்போது அமைச்சராகப் பதவி வகித்தவரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்ட அரசியல்வாதிகளில் ஒருவருவமான எஸ்.எம். சந்திரசேனா கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணையில் வாக்குமூலம் அளிப்பதற்காக அவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையானதுபோது இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது நெருங்கிய நண்பர்களுக்கு ரூ.25 மில்லியன் மதிப்புள்ள சோள விதைகளை விநியோகித்த சம்பவம் தொடர்பாக இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் சந்திரசேனாவின் சகோதரரான வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் மற்றும் சந்திரசேனவின் மனைவி சாந்தினி சந்திரசேன ஆகியோர் ஊழல் குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு, தலா 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-44)

# இலஞ்ச வழக்கு; நீதிபதி கைது!

கொழும்பு, ஜூலை 5

கதுருவெல குவாசி நீதிமன்ற நீதிபதி நேற்று இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விவாகரத்து வழக்கொன்றில் பெண்ணுக்குச் சாதகமான தீர்ப்பை வழங்குவதற்காக அவர் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரினாரென இலஞ்ச ஊழல் விசாரணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-இ)

# கடந்த 6 மாதங்களில் 62 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, ஜூலை 5

இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 62 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றால் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றுள் 44 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் குழுக்களால் நிகழ்த்தப்பட்டவையாகும். அவற்றில் 32 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் அனைத்துக்கும் காரணம் போதைப்பொருள் வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டியே என்று கூறப்படுகின்றது.

18 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாளக் குழுக்கள் அல்லாத வேறு நபர்களால் வெவ்வேறு தனிப்பட்ட காரணங்களால் நடத்தப்பட்டவை. அவற்றில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், 9 பேர் காயமடைந்துள்ளனர். (எ-75)

# செம்மணிப் புதைகுழி விடயத்தில் அரசு நீதியை நிலைநாட்டும்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூலை 5**


**செம்மணிப் புதைகுழி விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீதியை நிலைநாட்டும் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.**

**நேற்றுமுன்தினம் கரைச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செம்மணிப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அரசியற் தலையீடுகள் இன்றி விசாரணைகள் முன்னெடுக்கப்படும். செம்மணியில் எடுக்கப்பட்ட எலும்புத் தொகுதிகளின் மாதிரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்குப் பல ஆண்டுகளாகும். அதனால் அந்த எலும்பு மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கான கருவிகளை இலங்கைக்கு வழங்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார். (எ-113)

# இலங்கையை அச்சுறுத்தும் ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல்



கொழும்பு, ஜூலை 5

இலங்கையை அச்சுறுத்தும் ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் காரணமாக சுமார் 67 ஆயிரம் பன்றிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பன்றி இறைச்சி உள்ளிட்டவற்றை, வேறு மாகாணங்களுக்குக் கொண்டு செல்வதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேல், ஊவா, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்கள் உட்படப் பல மாகாணங்களில் கடந்த ஆண்டு இந்த வைரஸ் தொற்று வேகமாகப் பரவியது.

ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் பரவலைத் தடுக்க, பண்ணையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமாலி கொத்தலாவல கோரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடாந்தம்

# 800 சிறுவர்கள் புற்றுநோயால் பாதிப்பு!

கொழும்பு, ஜூலை 5

**நாட்டில் வருடாந்தம் சுமார் 33 ஆயிரம் புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அவர்களில் 35 சதவீதமானோர் அதாவது 800 பேர் சிறுவர் புற்றுநோயாளர்கள் என அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

மஹறகம தேசிய புற்றுநோய் மருத்துவமனையில் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுவர் நோயாளர்களுக்கான ஐந்து மாடிக் கட்டடத்தின் அடிக்கல் நடும் நிகழ்வில்
கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வருடாந்தம் மஹறகம தேசிய மருத்துவமனையில் 11 ஆயிரம் புற்றுநோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர்.
புற்றுநோய்ச் சிகிச்சைக்கான உபகரணங்களை மருத்துவமனைக்குத் தொடர்ச்சியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகள் மேலும் எளிதாக்கும்.
மேலும் மஹறகம மருத்துவமனையின் சமையலறை ஒரு முன்னோடித் திட்டத்தின் மூலம் தனியார் மருத்துவமனை சமையலறையின் நிலைக்கு மேம்படுத்தப்படும். நோயாளிக்கு ஏற்ற உணவுத் திட்டத்தை வழங்குவதற்குப் பதிலாக, நோயாளியின் தேவைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களுடனும் ஊட்டச்சத்து நிபுணர்களின் பங்களிப்புடனும் இந்த மருத்துவமனையில் ஒரு முன்னோடித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டவுள்ளது- என்றார். (ச-இ)

## இந்த வருடத்தில் 174 தமிழக மீனவர்கள் 23 படகுகளுடன் கைது

மன்னார், ஜூலை 5

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 23 படகுகளுடன் 174 தமிழக மீனவர்கள் கைதாகியுள்ளனர்.
அதேவேளை கடந்த 29ஆம் திகதி மன்னார்க் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் எட்டுப் பேரினுடைய வழக்கு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த மன்னார் மாவட்ட நீதிவான், இராமேஸ்வர மீனவர்கள் எட்டுப் பேரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ச-35)

## ருசியான உணவுகள் இலங்கை உள்ளீர்ப்பு

கொழும்பு, ஜூலை 5

உலகில் சிறந்த உணவு, சிறந்த உணவுகொண்ட நாடுகள் மற்றும் நகரங்களின் பட்டியலில் இலங்கை 69ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
தனியார் பயண வழிகாட்டி நிறுவனமான 'டேஸ்ட் அட்லஸ்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
100 நாடுகள் உள்ளடங்கிய இந்தப் பட்டியலில், 4.6 புள்ளிகளுடன் கிரீஸ் முதலிடத்திலுள்ளது. இலங்கை 69 ஆவது இடத்தில் உள்ளது.
இத்தாலி, மெக்சிகோ, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகள் அடுத்த நான்கு இடங்களைப் பிடித்துள்ளன. துருக்கி, இந்தோனேசியா, பிரான்ஸ், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் 6 முதல் 10 வரையிலான இடத்தைப் பிடித்துள்ளன.
போலந்து 11ஆவது இடத்தையும், இந்தியா 12ஆவது இடத்தையும், அமெரிக்கா 13 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. (ச-இ)

## சஞ்சீவவின் கூட்டாளி துப்பாக்கிச்சூட்டில் பலி



கொழும்பு, ஜூலை 5

ராகம, படுவத்தே பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக் குழுத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவின் கூட்டாளியான அமி உபுல் என்ற நபர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அடையாளம் தெரியாத இருவர் முச்சக்கரவண்டியில் வந்து படுவத்தே கிராமப்புற மேம்பாட்டுச் சாலையில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் இருந்த ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.
இதில் படுவத்தேயைச் சேர்ந்த 45 வயதான முன்னாள் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.
முதற்கட்ட விசாரணைகளில் அவர் குற்றச் செயல்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்றும் பாதாள உலகக் குழுத்தலைவர் கனேமுல்ல சஞ்சீவவின் கூட்டாளி என்றும் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இவ்வருடத்தில் இதுவரை ஒரு டிரில்லியனை ஈட்டிய சுங்கத்துறை

கொழும்பு, ஜூலை 5

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை சுங்கத்துறை ஒரு டிரில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது என்று சுங்கத்துறை இயக்குநர் ஜெனரல் சீவலி அருக்கோட தெரிவித்துள்ளார்.
சுங்கத்துறை இந்த ஆண்டு ரூ. 2.115 டிரில்லியன் வருவாய் இலக்கை நிர்ணயித்துள்ளது.
இந்த ஆண்டின் முதல் பாதியில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில், இந்த ஆண்டுக்கான அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கைவிட அதிகமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)




பாவம் ஓரிடம் பழி ஓரிடம் எண்டு சொல்லுவினம். அது உண்மைதான் போல. கிட்டடியில ஒரு பெடியன் (இளம் குடும்பஸ்தர்) சாத்திரம் கேக்கப் போன இடத்தில சாமியார் குடுத்த இளநீயைக் குடிச்சதால செத்திட்டார் எண்டொரு செய்தியைக் கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் அந்தப்பெடியன் செத்ததுக்கு காரணம் சாத்திரக்கார சாமியார் குடுத்த இளநீ இல்லையாம். அப்ப என்ன காரணம்?

அந்தப்பெடியனுக்கு மூண்டு மாதத்துக்கு முதல், தமையன் வீட்டில நிண்ட குட்டிநாய் ஒண்டு கடிச்சிருக்கு. ரண்டு பல்லுப்பட்டாலும் பெரியகாயமில்லை எண்டதால ஆள் அதைப் பற்றி பெரிசாக் கவனிக்கேலை. நாய்க்குட்டிக்கும் முதலே ஊசியொண்டும் போடுப்பட்டிருக்கேலை. இவரும் நாய்க்கடிக்கு ஆஸ்பத்திரியில கொண்டுபோய்க் காட்டவுமில்லை, ஊசியும் போடேலை. நாலைஞ்சு நாளில காயமும் மாறிட்டுது. அதால அதை எல்லாரும் மறந்திட்டினம். அதுக்குப் பிறகு கிட்டடியில அந்தப் பெடியனுக்கு வயித்துக்குத்து வந்திருக்கு. அதோட சாப்பாட்டுக்கும் மனமில்லை. அதால பக்கத்தில இருக்கிற பிரவேட் ஆஸ்பத்திரியிலபோய் ஆள் மருந்தெடுத்திருக்கிறார். அப்பகூட நாய்கடிச்சதைப் பற்றிச் சொல்லேலை. மூண்டு மாசம் கடந்ததால பெடியன் அதை மறந்திட்டார். வயித்துக்குத்துக்கு எடுத்த மருந்தையும் பெடியன் போடேலை. அப்பதான் 'உது ஆரோ செய்வினை செய்திருக்கினம்' எண்டு ஆரோ சொல்ல, பக்கத்தில சாத்திரம் பாக்கிற சாமியாரிட்ட பெடியன் போயிருக்கிறான்.


சாமியாரும் பெடியனை வடிவாப்பார்த்திருக்கிறார். அவருக்கும் என்ன வருத்தம் எண்டு விளங்கேலை. ஆனால் வந்த உழைப்பை விடவும் மனமில்லை. அதால இளநீக்குள்ள விபூதியைப் போட்டுட்டு 'இந்தா இதைக் குடி. எல்லாம் நாளைக்கே மாறிடும்' எண்டு உருட்டியிருக்கிறார். உடனேயே பெடியனும் மடக்மடக் எண்டு ஒரே மூச்சில இளநீயைக் குடிச்சு முடிச்சிட்டான். 'இந்த இளநீயோட எல்லாம் மாறிடும்' எண்டு பெடியன் புளுகப்பட்ட அடுத்த நிமிசமே மயங்கி விழுந்திட்டான். உடனேயே அம்புலன்ஸுக்கு அடிச்சுக் கூப்பிட்டிருக்கினம். அம்புலன்ஸ்காரர் வந்து செக் பண்ணேக்கதான் பெடியன் முதலே செத்திட்டார் எண்டது தெரிய வந்திருக்குது. அதால அம்புலன்ஸ் திரும்பிப்போக, வீட்டுக்காரர் 'பொடியை' பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கினம். அதுக்குள்ள சாத்திரக்கார சாமியார் குடுத்த இளநீயாலதான் பெடியன் செத்திட்டான் எண்டு ஊரெல்லாம் கதை பரவிட்டுது. சாமியாருக்கும் 'என்னை வந்து பொலிஸ் பிடிக்கப்போகுதோ?' எண்டு குலைநடுக்கமாம். பிறகு போஸ்ட்மோட்டம் செய்யேக்கதான் நாய்கடிச்சதால அந்தப் பெடியனுக்கு நீர்வெறுப்பு நோய் வந்து, அதாலதான் வயித்துக்குத்தும் வந்திருக்கெண்டும், நீர்வெறுப்புநோயோட இளநீயைக் குடிச்சதாலதான் மயக்கம்வந்து அப்பிடியே செத்திட்டார் எண்டும் உண்மை தெரியவந்திருக்குது. இல்லாட்டி சாமியாரிலதான் கொலைப்பழி விழுந்திருக்கும். நாய் கடிச்சால் அது சின்னக்காயம் எண்டாலும் உடன கொண்டுபோய் ஆஸ்பத்திரியில காட்டி அதுக்குரிய ஊசியளைப் போடுறதுதான் புத்திசாலித்தனம். அதைக் கவனிக்காமல் விட்டால் இப்பிடி அநியாயமா உயிரை விடவேண்டியதுதான் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி




**சிவாகமதிலகம், சைவசித்தாந்த இரத்தினம் பிரம்மஸ்ரீ சிவசாமிஐயர் குமாரநாத குருக்கள்**

குப்பிழான் மக்களின் குலதெய்வமாக விழங்கும் கற்கரை விநாயகப்பெருமானின் ஆலயத்தில் 1965 ஆண்டு தொடக்கம் நான்கு தசாப்தகாலமாக பிரதம சிவாச்சாரியாராக கடமை புரிந்த, சிவாகமதிலகம், சைவசித்தாந்த இரத்தினம் பிரம்மஸ்ரீ சிவசாமிஐயர் குமாரநாத குருக்கள் (03.07.2025) வியாழக்கிழமை அன்று சிவப்பேறு எய்தினார். குருக்களுடைய காலத்தில் ஆலயத்தொண்டனாகவும், கிராம மக்களின் உற்ற நண்பனாகவும் விளங்கி எம்பெருமானின் பாதக்கமலங்களில் சரணடைந்துள்ளார். குருக்களுடைய ஆத்மா சாந்தியடைய எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

**தகவல் : கற்கரை விநாயகப்பெருமான் ஆலய பரிபாலன சபை**

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதல்





**கடந்த (26.05.2025) திங்கட்கிழமை (05.06.2025) வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்குகள்**

**அமரர்**

**சிதம்பரப்பிள்ளை அருளேஸ்வரி**

**கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (05.07.2025) சனிக்கிழமை காலை 04.00 மணியளவில் வெலிக்கந் தோட்டம் பிள்ளையார் கோவில் முன்னுள்ள குளக்கரையில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். மற்றும் அவர்களின் இறுதிசடங்கில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தவர்ளுக்கும் தெலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கம் எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிள்றோம்.

**வெலிக்கந் தோட்டம்,**
**துன்னாலை கிழக்கு,**
**கரவெட்டி.**

**குடும்பத்தினர்.**
**077 615 5618**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

மலர்வு 24 . 06 . 1959

உதிர்வு 30 . 06 . 2025



**அமரர் நாகராசா கனகசபாபதி**

(விநாயகர் அரிவுத் தொழிற்சாலை உரிமையாளர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கனகசபாபதி அவர்கள் கடந்த (30.06.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா (நாகேந்திரம்) - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - காந்திமதி (திலகம்) தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களகௌரியின் அன்புக் கணவரும், நிரோஜன் (கனடா), பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளான் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**076 494 5997**
**071 130 6225**

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 03 . 1950

மறைவு 04 . 07 . 2025



**வைரமுத்து றொபேட் இராசலிங்கம்**

நாவற்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து றொபேட் இராசலிங்கம் அவர்கள் நேற்று (04.07.2025) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாமுவேல் லூசி தம்பதியரின் அன்பு மருமகனும், நீற்றா புஸ்பதேவியின் அன்புக் கணவரும், ஜீன்பிரவீனா (ஆசிரியர் நடேஸ்வரக் கல்லூரி), ஜொனி பிரகலாதன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பண்டத்தரிப்பு), ஜோன்சன் பிரகாஷ் (மென்பொருள் பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெ.சதீசன் (விற்பனை முகாமையாளர் A.Baur & company (PVT) Ltd அவரின் அன்பு மாமனாரும், விஹான்யாவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசமணி, இராசதுரை மற்றும் இராஜேஸ்வரி, இராஜவடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பவளமலர், மகிழ்மலர், ரஞ்சிதமலர் மற்றும் வோல்டர் ஜெயராஜா, றொஜினோல்ட் தர்மராஜா, கிறிஸ்ரி சந்திரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**077 326 6959**
**075 956 8145**

**35/14 தில்லைக் கட்டி வீதி,**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




உண்மை - நேர்மை - அஞ்சாமை

# செப்ரெம்பர் சதிராட்டம்..(?)

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம், எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் முற்றாக நீக்கப்படும் என்று அறிவித்துள்ளார் நீதியமைச்சரான ஹர்ஷண நாணயக்கார. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதியை அரசாங்கங்கள் வழங்குவது இதுவொன்றும் முதல்முறையல்ல. எண்ணுக்கணக்கற்றவகையில், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான கருத்தாடல்கள் இதற்கு முன்னர் இடம்பெற்றுள்ளன. ஆனால், காலவரையறையொன்றை நிர்ணயித்து, அந்தக் காலப்பகுதிக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்படுவது இதுவே முதல்முறை. ஆதலால்,'எப்போதும்போல' ஏதோவொரு எதிர்பார்ப்பு தமிழர்களின் மனங்களில் துளிர்க்கவே செய்கின்றது. அதேநேரம், அரசாங்கம் நிர்ணயித்துள்ள காலவரையறை சில காரிய காரணங்களுக்கானதோ என்றும் எண்ணத்தோன்றுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், அண்மையில் இலங்கைக்குப் பயணம்மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின்போது, இலங்கையின் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்குநிகராக பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் தொடர்பிலும் அவர் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்த அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தொடருக்கான நிகழ்ச்சிநிரலில், இலங்கை தொடர்பான அறிக்கையிடல்கள் மற்றும் விவாதங்கள் என்பன முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன. இவ்வாறான பின்னணியில்,'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைச் சமாளிப்பதற்காகத்தான் 'செப்ரெம்பர்' காலவரையறையா? என்ற கேள்வி எழுவதில் நியாயங்கள் இருக்கவே செய்கின்றன.

1979ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. 'இதோ நீக்கப்படும்','எதிர்வரும் வருடம் நீக்கப்படும்' என்று கூறிக்கூறியே 35 வருடங்கள் முழுமையாக உருண்டோடிவிட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பலியெடுப்புகள் ஏராளம், அது கொடுத்துள்ள பாதிப்புகள் ஏராளம். அரசியலில் அல்லது ஆட்சிக்கு வரும் தரப்பின் இலவச இணைப்பாக அது ஒட்டிக்கொண்டே இருக்கின்றதே அன்றி, அதை உதறிவிடுவதற்கு எவரும் தயாராகவில்லை. தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள், ஆயுதக் குழுக்களாக இருந்தபோது இதே பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களை தாறுமாறாக வேட்டையாடியது. இந்தச் சட்டத்தின் வலி உணர்ந்தவர்கள் என்பதால்தான், அநுர தரப்பினர்கள் அந்தச் சட்டத்தைத் தூக்கிக் கடாசுவார்கள் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. அதற்குரிய தார்மீகப் பொறுப்பும் அரசாங்கத்தினருக்கு உள்ளது.


பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர், ஏற்படக்கூடிய வெற்றிடத்தை நிவர்த்தி செய்யக்கூடியவாறு பிறிதொரு சட்டத்தை உருவாக்கவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் நீதியமைச்சர் ஹர்ஷண கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால், நாட்டில் தற்போதுள்ள குற்றவியல் சட்டக் கோவைகளின்கீழ் 25 வருடங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைகள் விதிப்பது சாதாரணமாக உள்ளநிலையில், குற்றவியல் சட்டக்கோவையில் எத்தகைய பலவீனம் உள்ளதென்று அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றான சட்டத்தை உருவாக்க எத்தனிக்கின்றது என்பது அரசாங்கத்துக்கே வெளிச்சம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## நாளொரு நல்வார்த்தை

கல்வியின் பயன் எதையும் கோபப்படாமலும்,
தன்னம்பிக்கையை இழக்காமலும்
செவிசாய்க்கும் திறன்

–ராபர்ட் பிராஸ்ட்–




# ஐ.எம்.எப். பிடியில் இருந்து விரைவில் விடுபடுவோம்!

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 5**

**சர்வதேச நாணயநிதியத்தின் பிடியில் இருந்து விரைவில் விடுபடுவோம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது- முன்பிருந்த ஆட்சியாளர்கள் பொருளாதர ரீதியில் இந்த நாட்டை வீழ்த்தியுள்ளனர். அனைத்து நாடுகளிடமும் கடன் வாங்கியுள்ளனர். வங்குரோத்து அடைந்த நாடாக எமது நாடு மாறியிருந்தது. அதனாலேயே சர்வதேச நாணயநிதியத்தின் உதவியை நாடவேண்டியிருந்தது. அதிலிருந்து விடுபடும் இலக்கோடுதான் நாங்கள் செயற்படுகின்றோம். விரைவில் விடுபடுவோம். வீழ்ந்த பொருளாதாரத்தை உடனடியாகக் கட்டியெழுப்புவதற்கு அந்நியச் செலாவணியை உடனடியாகப் பெற வேண்டியுள்ளது. அதற்கான பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம்.

எல்லா வேலைத்திட்டங்களிலும் எல்லா முதலீடுகளில் இருந்து வந்த தரகு (கொமிசன்) முறைமை ஊழல் போன்றவை இப்போது பூஜ்ஜிய மட்டத்துக்கு வந்துள்ளது. விரைவில் ஊழலற்ற எல்லா மக்களும் வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்-என்றார். (எ-75)

# தரம் 1 மாணவர்கள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 5

2026 ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம் 1 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

இந்தவிண்ணப்பங்களை ஓகஸ்ட் 4ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட அஞ்சல்மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பவேண்டும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# இலங்கையில் அதிகரித்துள்ள ஏழைக் குடும்பங்கள்


கொழும்பு, ஜூலை 5

இலங்கையில் 2000ஆம் ஆண்டு 11 இலட்சமாகக் காணப்பட்ட ஏழைக் குடும்பங்களின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டு 15 இலட்சமாகவும் 2024ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 18 இலட்சமாகவும் அதிகரித்துள்ளது என்று சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

அஸ்வெசுமத் திட்டத்தின் கீழ் 18 இலட்சம் பேர் பயனடைகின்றனர். 9 இலட்சம் பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அப்துல் வஸீத் எம்.பி.யானார்

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அப்துல் வஸீத் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். நளீம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அந்த வெற்றிடத்துக்கு அப்துல் வஸீத் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)




# பகிடிவதைக் கட்டுப்பாடு; பிரதமரால் செயலணி

கொழும்பு, ஜூலை 5

பிரதமர் ஹரிணி அமரசூரிய பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் செயலணி ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

இந்தச்செயலணி 2028 இல்பகிடிவதையைஇல்லா தொழிப்பதை நோக்கமாகக்கொண்டு செயற்படும். பகிடிவதை மட்டுமன்றி உயர்கல்விக் கூடங்களில் இடம்பெறும்சகலவன்முறைகள் பற்றியும் விசாரணை நடத்துமாறு பிரதமர் இந்தச் செயலணிக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மாணவர்கள்,கல்விசார் உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்குமிடையிலான பிரச்சினைகள் பற்றியும் ஆராயும்படி அறிவுறுத்தியுள்ள பிரதமர் மாணவர்களைப் பகிடிவதைக்குத் தூண்டும் காரணிகள் பற்றியும் ஆராயுமாறு அறிவுறுத்தியுள்ளார். (ச-6)

நாளை

ஞாயிற்றுக்கிழமை - ஆனி 22

06.07.2025

சுபநேரம் : 08.58- 10.28

ராகுகாலம் :02.28- 0 5.58


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். திடீர்செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு குடும்பம் தொடர்பான வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடலாம்.

**இடபம்:** அதிகாரிகளின் சந்திப்பும், அவர்களால் காரிய அனுகூலமும் உண்டாகும். தாயிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் ஆலோசனை கேட்டுவருவார்கள்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர் களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். பிற்பகலுக்குமேல் சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்ட நாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியப் பிரமுகர் பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கன்னி:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங் கள் அனுகூலமாகமுடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் அனுசரணை யாக நடந்துகொள்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்குமேல் மற்றவர் களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**விருச்சிகம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று எச்சரிக்கை யாக இருக்கவும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். இளைய சகோதரவகையில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** வழக்கமான பணிகளில் மட்டும் ஈடுபடவும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய வேண்டியிருக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்புமனதுக்கு உற்சாகம் தரும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்றுவருவீர்கள்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடு படாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகள் உதவிகேட்டு வருவார்கள்.



# வணிக வளாகங்களுக்கு மாணவர் களப்பயணம்

யாழ்ப்பாணம், ஜுலை 5

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வணி கப்பிரிவின் தலைமையில், வணிக வாரத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் சிறப்பு களப்பயணம் ஒன்று முன்னெடுக் கப் பட்டது. இதன் ஒரு பகுதியாக, கிளி நொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதான வணிக மற்றும் தொழிற்றுறைகள் - இலங்கை மத்திய வங்கியின் கிளி நொச்சிப் பிரிவு, இராணைமடு நீர்த்தேக்கம், வானவில் ஆடைத் தயா ரிப்புத் தொழிற்சாலை ஆகியவை பார் வையிடப்பட்டன.

இந்த நிகழ்வில் அச்சுவேலி புனித அன்னைத் தெரேசா மகளிர் கல்லூரி மற்றும் ஆவரங்கால் நடராஜா இராம லிங்க வித்தியாலயம் ஆகிய அயல்பாட சாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டுதங்களது அனுபவங்களைப் பகிர்ந்தனர். (ச)



# நீச்சல் போட்டி பற்றிக்ஸ் மாணவனுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜுலை 5

வடக்கு மாகாண பாட சாலைகளுக்கு இடையே இடம்பெற்ற 100 மீற்றர் நீச்சல் போட்டியில் சென். பற் றிக்ஸ் கல்லூரி மாண வன் கணேஷ்வரன் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

20 வயதுக்கு உட்பட் டோருக்கிடையிலான இந்தப் போட்டியானது கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் குறித்த மாண வன் 1.39 நிமிடத்தில் இலக்கை நீந்திக் கடந்து மாகாண மட்டத் தில் முதலாம் இடத் தைப் பெற்று தங்க பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (ச-27)

# நூல் வெளியீடும் விளையாட்டுப் போட்டியும்

யாழ்ப்பாணம், ஜுலை 5

பருத்தித்துறை ஓடக்கரை சன சமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு நூல் வெளியீடும் விளையாட்டுப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இதன்போது பல்வேறு பிரிவுகளில் நடத் தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டு வோருக்கு பரிசில்கள் வழங் கப்படவுள்ளன. (ச-41-100)

# சிவத்தமிழ்ச்செல்வி குருபூசை வைபவம்

யாழ்ப்பாணம், ஜுலை 5

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் முன் னாள் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி கலா நிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பதினேழாவது ஆண்டு குருபூசை வைபவம் ஆனிமாத விசாக நட்சத்திர நன்னாளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி ஆலய அன்ன பூரணி மண்டபத்தில் ஆலயத் தலைவர் தலைமை யில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பௌதீகத்துறை பேராசிரியர் முருகதாஸ் தணிகைச்செல்வன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உடலியங்கியல்துறை விரிவுரையாளர் மருத்துவர் பேரானந்தராஜா டினேசன் சிறப்பு விருந் தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)





# ஓவியக் கண்காட்சி

கொடிகாமம், ஜுலை 5

ரி.பி.ஹன்ட் ஓவியக்கூடத்தின் ஏழாவது ஆண்டின் பரி சளிப்பும் ஓவியக்கண்காட்சியும் ஸ்தாபகர் திருமதி யோக மணி அழகரட்ணம் தலைமையில் ரி.பி.ஹன்ட் ஓவியக்கூ டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ச.லலீசன், யாழ்.பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள்பீட விரிவுரையாளர் ஆ.காங்கேயன், பிரிட்ஜ் அக் கடமி(பிரைவேட்)லிமிடெட் இயக்குநர் து.ஸ்ரீசுடரோன், சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் வண பிதா செ.துரைரத்தினம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் ஐ.தேவகுஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். (ச-41-159)

# மன்னார் ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

மன்னார், ஜுலை 5

நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னையின் ஆலய வருடாந்தத் திருவிழா முத்தரிப்புப் பங்குத்தந்தை அருட் தந்தை தேவராஜா கொடுதோர் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதன்போது நானாட்டான் பங்குக்குட் பட்ட 8 துணை ஆலயங்களுக்கான கொடிகளும் ஏற்றி வைக்கப்பட்டன. தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப் புக்கொடுக்கப்படும். (ச-41-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியில்


# 12 குடியிருப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 5

சாவகச்சேரிப் பிரிவில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீர் ஏந்து பொருள்களை வைத்திருந்த 12 குடியிருப்பாளர்களுக்கு சுகாதாரப்பிரிவினரால் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 463 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்குத் தடுப்புக் களத்தரிசிப்பில் நுளம்பு பெருகக்கூடிய 128 இடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 10 இடங்களில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டன.

இதில் 12 குடியிருப்பாளர்களுக்கு மூன்று தினங்களுக்குள் துப்பரவு செய்யுமாறும் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (ச-41-9)





செம்மணியில் மீட்கப்படும் என்புக்கூடுகள்

# சர்வதேச மேற்பார்வையில் பாதுகாக்கப்படவேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜுலை 5**

**செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சியில் மீட்கப்படும் என்புக்கூடுகள் அனைத்தையும் இலங்கை அரசு சர்வதேச மேற்பார்வையின்கீழ் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையெனில், தடயவியல் முடிவுகள் சட்டபூர்வமாக பலவீனமடையலாம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி, மனித உரிமைகள் மற்றும் போர்க் காலத்தில் அப்பாவித் தமிழ் மக்களின் துயரங்கள் குறித்து அக்கறை கொண்டவர்களின் மனசாட்சியை உலுக்கியுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சியின் இரண்டாம் கட்டத்தின் 6ஆம் நாளில், ஞாயிற்றுக்கிழமை நடந்த அகழ்வாராய்ச்சியில், குழந்தைகள் உட்பட மேலும் பல எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் நீலநிறப் பாடசாலைப்பை மற்றும் ஒரு பொம்மை என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் அனைத்தும் அரசாங்கத் தடயவியல் மருத்துவ அதிகாரியின் பாதுகாப்பின்கீழ் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் ஆதாரங்கள் அழிக்கப்படலாம் அல்லது சேதப்படுத்தப்படலாம் என்ற கவலையை, மனித உரிமை ஆர்வலர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, பாதுகாப்புக் குறித்த தெளிவான ஆவணப்படுத்தல் மிக முக்கியம், ஏனெனில் அகழ்வாராய்ச்சி முதல் ஆய்வகம் வரை எச்சங்களை யார் கையாண்டார்கள் என்பதற்கான தெளிவான பதிவுகள் அவசியம். இல்லையெனில், தடயவியல் முடிவுகள் சட்டப்பூர்வமாக பலவீனமடையும்.

இலங்கை அரசு சர்வதேச மேற்பார்வையின்கீழ் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்தவேண்டும். செம்மணிப் படுகொலைச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நீதிக்கு முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்ய ஒரு சர்வதேச விசாரணை இப்போது தொடங்கப்படவேண்டும்- என்றார். (ச)

# இலங்கைக்குக் கடத்த வைத்திருந்த 132 கிலோ கடலட்டைகள் மீட்பு

சென்னை, ஜுலை 5


இராமேஸ்வரம் பாம்பன் கடற்கரையில் இலங்கைக்குக் கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த 132 கிலோ கடலட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக கடலட்டைகள் பதுக்கிவைத்திருப்பதாக மண்டபம் வனத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பாம்பன் தெற்குவாடிக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் குறித்த கடலட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைக் கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-35)

# வவு.விபுலானந்தக் கல்லூரிக்கு மைதானம் அமைக்கக் காணி

வவுனியா விபுலானந்தக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானத்திற்கான காணி வழங்குவதற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வவுனியாப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரிக்கு விவசாயக் காணியினை மைதானத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களம் அதனை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளது. காணி ஆணையாளருக்கும் விடுவித்துத் தருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே பிரதேச செயலக மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனுமதி பெறவேண்டியுள்ளது. அதனைவிடுவிக்க தீர்மானம் நிறைவேற்றவேண்டும் எனக் கோரினார். அவரின் கோரிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தக் காணியை வழங்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-18)



# தனியார் கல்வி நிலையங்களுக்கு ஞாயிறுகளில் விடுமுறையளிக்குக

## வவுனியாப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஜுலை 5

வவுனியா நகரில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்விநிலையங்களுக்கு விடுமுறை வழங்கவேண்டும் என வவுனியாப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் வவுனியாப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது, வவுனியாப் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறி வகுப்புகளைக் கருத்திற்கொண்டு தனியார் கல்விநிலையங்களுக்கு விடுமுறை வழங்கவேண்டும் எனப் பலரும் சுட்டிக்காட்டினர் எனத் தெரிவித்தார்.

இதன்போது, பதிலளித்த வவுனியா மாநகரசபை மேயர் சு.காண்டீபன், ஞாயிற்றுக்கிழமைகளில் தரம் 10க்குக் கீழ் தனியார் கல்விநிலையங்களை நடத்துவதற்கு தடைவிதித்து மாநகரசபையில் தீர்மானம் நிறைவேற்றி அதனைத் தாம் மாநகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஞாயிற்றுக்கிழமைகளில் தரம் 10க்கும்கீழுள்ள மாணவர்களுக்குத் தனியார் கல்வி நிலையத்தை நடத்தமுடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது. (ச-18)

# நாவலர் கலாசார மண்டபத்தின் முன்புறம் கழிவுகளின் கூடாரமா?

## யாழ்.மாநகரசபை பாராமுகம்

யாழ்ப்பாணம், ஜுலை 5

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்துக்கு அருகில் இனந்தெரியாத நபர்களால் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதி கழிவுகள் நிறைந்த இடமாகக் காட்சியளிக்கின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் மற்றும் அதன் வளாகத்தில் அமைந்துள்ள தொல்பொருள் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு முன்பாகவுள்ள வீதியிலேயே இவ்வாறு கழிவுகள் வீசப்படுகின்றன. அவற்றை மாநகரசபை அகற்றாததனால் அவை வீதிகளில் சிதறுண்டு காணப்படுகின்றது. இதனால் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு வருவோர் தொல்பொருள் அருங்காட்சியகத்தினை பார்வையிடவரும் சுற்றுலாப்பயணிகள், வீதியால் செல்லும் பொதுமக்கள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். எனவே குறித்த பகுதியில் கழிவுகளைக் கொட்டுவோரை இனங்கண்டு மாநகரசபை கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்

**2025ம் ஆண்டுக்கான தெரு விளக்குகளை பழுதுபார்த்தல்/ புதிதாக பொருத்துதல் தொடர்பான சேவைகளுக்கு விலை மனுக் கோரல்**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2025 ஆம் ஆண்டிற்கான தெரு விளக்குகளை (Street Light) பழுதுபார்த்தல் மற்றும் புதிதாகப் பொருத்துதல் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பிக்கும் வழங்குநர் இரு ஆண்டுகளுக்கு குறையாத மேற்குறித்த சேவையை இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய ஒப்பந்தகாரராக கட்டாயமாக இருத்தல் வேண்டும்.
2. குறித்த சேவையை வழங்குவதற்குரிய தகைமையுள்ள தேவையான ஆளணி, உபகரண வசதிகள் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் யாவற்றையும் குறித்த வழங்குநர் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.
3. குறித்த வழங்குநர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. சேவை வழங்குநர்கள் பெறுகை விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் 09.07.2025 தொடக்கம் 22.07.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3.500.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. பெறுகை ஆவணங்கள் **23.07.2025 ம் திகதி பி.ப 3.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்"**. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் / கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தி. பிரகாஷ்,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**


# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 5

மக்கள் வங்கியின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்தியமும், இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல்01 மணி வரை மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் உதிரம் கொடுத்து உயிர்கள் காக்க அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)


## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பெண் வேலையாள் தேவை

தொடர்புகளுக்கு:
**078 376 9284**

## வீடு வாடகைக்கு

**உரும்பிராய்யில் பலாலி வீதிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.**

தொடர்பு: **077 625 8242**


# அலங்கார உற்சவம்

கொடிகாமம், ஜூலை 5

கொடிகாமம் கோயிலாமனையில் அமைந்துள்ள அருள்மிகு கண்ணகை அம்பாள் வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை வெள்ளோட்டத் திருவிழாவும், சப்பறத் திருவிழாவும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழா வும், 14ஆம் திகதி திங்கட்கி ழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41-159)


## INVITATION FOR BID 2025 /11
## Regional Directorate of Health Service Jaffna

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall meet the CIDA registration and qualification requirements. Additional details are provided in the Procurement Document.
4. Interested eligible bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village Pannai Jaffna. (T.P:0212222278, Fax: 0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 07.07.2025 until 18.07.2025 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 14.07.2025 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 21.07.2025 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2025/REC/W/12 | Improvement Work at SMO Office, Gurunagar | 3.64 | 90 Days | C9 or above (Buildings) | 3,000.00 | 37,000.00 | Till 06.10.2025 |
| NP/04/41/2025/REC/W/16 | Improvement Work at MOH Office, Velanai | 1.7 | 76 Days | C9 or above (Buildings) | 1,500.00 | 17,000.00 | Till 06.10.2025 |
| NP/04/41/2025/REC/W/17 | Repair and Construction Work at Base Hospital Tellipallai Wash Room Ward 01 & 02, Road Work, OPD Front Building and Boundry Wall | 2.79 | 86Days | C9 or above (Buildings) | 3,000.00 | 28,000.00 | Till 06.10.2025 |
| NP/04/41/2025/REC/W/18 | Improvement Work at Base Hospital, Tellipallai | 1.30 | 73 Days | C9 or above (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 06.10.2025 |
| NP/04/41/2025/CBG/W/04 | Construction of Water Sump and Water Tank at Divisional Hospital, Nainativu | 2.76 | 85 Days | C9 or above (Buildings) | 3,000.00 | 28,000.00 | Till 06.10.2025 |

**Chairman**
**Regional Procurement Committe**
**Regional Directorate of Health Service,**
**Jaffna**

(GR 45430) E

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பல சரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டிற்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 years experience)
2. Administration
3. Computer billing + cashier
4. Sales assistant
5. Driver - AD licence
6. Packing - பொதியிடல்
7. Part time - 05.00 p.m - 10.00 p.m

வயது எல்லை - 18 - 35

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 419 5209, 077 419 5218**

## Notice of Meeting

**Past Pupil's Association**

**J/ Holy Family Convent, Jaffna**

**Annual General Meeting**

**06th of July 2025**

**at 3.30pm**

**in School Main Hall**

**All are Welcome**

**P.P.A. HFC,**
**Jaffna**

## Notice about Changes in Invitation for Bids - 2025/06
## District General Hospital Kilinochchi
## Supply & Installation of Intercom System


1. Regarding about the tender calling published on daily news dated on 25.06.2025
2. Existing (6) Closing time of bids for the **Supply & Installation of Intercom System (NP/DGH/KOC/2025/PSDG/05) is 11.30 Am of 9th july 2025 has been changed to 2.30 PM of 18 July 2025 and bids will be opened immediately after closing of bids in the presence of the bidders or their representatives.**
3. Bid security **validity up to 05.10.2025 has been changed up to 14.10.2025**

**Chairman**
**Regional Procurement Committee**
**District General Hospital ,Kilinochchi.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
09 . 09 . 1935



விண்ணில்
03 . 07 . 2025

## பிரம்மஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள்

இணுவிலை பூர்வீகமாகவும், நாவற்குழியை பிறப்பிடமாகவும், குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம் மற்றும் இணுவில் செகராசசேகர பிள்ளையார் ஆலய முன்னாள் பிரதம குருக்களாக விளங்கிய பிரம்மஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள் (கணபதி துரந்தரர், சிவாகம திலகம், சைவசித்தாந்த இரத்தினம்) அவர்கள் 03.07.2025 வியாழக்கிழமை காலை சிவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமிஐயர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜக்குருக்கள் - ரங்கநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவசேனாவின் அன்புக் கணவரும், மாதங்கி, மாதுளன் குருக்கள், மாலினி, மாதினி, ஆரூரன் குருக்கள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராகவன், கௌரீ, ரஜீவன், அபராஜிதக்குருக்கள், கானப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேன், வைஷ்ணவி, கிறிஸ், சந்தியா, விருசாந்தன், சரண்யா, டானியல், நயானா, நிக்கிலஸ், சோபியா, அலெக்சாண்டர், ஜொனதன் கீர்த்தனா, லக்ஷனா, விக்னேஷ், லக்ஷ்மன், ஸ்ருதி, ஐஸ்வரியா, பாலகாந்தன், சந்தோஷிகா, விஸ்வவாரணன், சௌஜன்னியா, சண்முகப்பிரியன், ரிஷிகேசன், திவ்வியா, மனுஷியா, மகன்னியாசன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சயன், ஈசா, தாரா, சுவேசா, ரோணியா, பியட், ஆஸ்ரல், யுகானா, ஸ்ரீனா, வரேண்ணியா ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்ற உருத்திரமூர்த்திக்குருக்கள் மற்றும் ஸ்ரீரஞ்சனி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியக் குருக்கள் - ரதிரூபா மற்றும் உமேந்திரக்குருக்கள் - வனஜாம்பாள், காலஞ்சென்றவர்களான சோமாஸ்கந்தக் குருக்கள் - ரஞ்சிதமணி மற்றும் ராதாகிருஷ்ணக் குருக்கள் - சந்தானலக்ஷ்மி, இராஜாராம் குருக்கள் - தேவமனோகரி, காலஞ்சென்றவர்களான சாரதாம்பாள் - வைத்தீஸ்வரஜயா, சிவராசா - யோகம்மா, ரங்கநாயகி, காலஞ்சென்ற ராதாகிருஷ்ண ஐயர் மற்றும் கல்யாணி அம்பாள், நர்த்தனராஜக் குருக்கள் - பரமேஸ்வரி, காலஞ்சென்ற Dr.விஸ்வேஸ்வர ஐயர் மற்றும் அம்பிகாதேவி, காலஞ்சென்ற சபேஸ்வரி மற்றும் சுப்ரமணிய ஐயர், காலஞ்சென்ற மிருத்யும் ஜெயம் மற்றும் தனலக்ஸ்மி ஆகியோரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் உறவினரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.00 மணியளவில் திரு உடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இணுவில் கந்தசுவாமி கோவிலடி,**
**இணுவில் மேற்கு இணுவில்**
**077 132 7704**
**076 834 8882**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**44 7500 110675, 44 7985 547827**
**+1 (416) 876 2540, 45224 35945**

(CS 58763) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு காற்றில் பறந்த வாக்குறுதி

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு


கொழும்பு, ஜூலை 5
புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் என வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்துவருகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.
இதுதொடர்பில் அந்தக் கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜித் பி பெரேரா தெரிவிக்கையில்,
புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் எனவும், அதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அரசாங்கம் உறுதியளித்திருந்தது. எனினும், தற்போது புதிய அரசியலமைப்புப் பற்றி எவ்வித கருத்தாடலும் இடம்பெறவில்லை.
ஜனாதிபதி நாட்டு மக்களுக்காக பல தடவைகள் உரையாற்றியுள்ளார். சர்வதேச மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார். எனினும், வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் என அவர் கூறாமல் இருக்கின்றார்.
இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதாக இருந்தால் அதற்குரிய பணிகள் தற்போது ஆரம்பித்திருக்கவேண்டும். அரசாங்க மொன்றின் 4 மற்றும் 5 ஆவது வருடத்தில் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணியை முன்னெடுப்பது, சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது என்பனவெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகவே அமையும் - என்றார். (ச-44)

# மொழிபெயர்ப்புக்கு ஏ.ஐ. மென்பொருள்

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 5
செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளுக்கான மொழிபெயர்ப்பு மென்பொருளை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,
மொரட்டுவப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்கள் தனியார் துறையுடன் இணைந்து இந்த மென்பொருளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.
இந்த மென்பொருள் அடுத்த ஆறு மாதங்களுக்குள் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கிடைக்கும்.
இந்தப் புதிய மென்பொருள் பேசப்படும் சிங்கள உள்ளடக்கத்தை சில விநாடிகளில் தமிழுக்கு மொழிபெயர்க்கும் திறனையும், அதேபோல் மறுதலையாகவும் மொழிபெயர்க்கும் திறனையும் கொண்டிருக்கும் - என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்



மலர்வு 26 . 12 . 1950

உதிர்வு 02 . 07 . 2025

## நடராஜா கேதீஸ்வரநாதன்

அனலைதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், ஜேர்மனியினை வாழ்விடமாவும் தற்போது கோப்பாய் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்த திரு. நடராஜா கேதீஸ்வரநாதன் (02.07.2025) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலம்சென்றவாகளான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம்சென்ற கௌரி (ஓய்வுநிலை அதிபர் யா/அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலம்) அவர்களின் பாசமிகு கணவரும், பிரபாகரன் (கனடா) அவர்களின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரன், காலம்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சுந்தரேஸ்வரி காலம்சென்ற ஞானசுப்ரமணியம் அவர்களின் பாசமிகு சகோதரனும், பிரேமா, சந்தானமலர், காலம்சென்ற வெற்றிவேல், நந்தினி, கௌசலா அவர்களின் பாசமிகு மைத்துனரும், சகிதா அவர்களின் மாமனாரும், ஞீனிகா, ஹரினிஷா, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், வித்யா துமிந்தன், நித்யா, கஜேந்திரன் ஆகியோரின் மாமனாரும், சிந்துஜன், நிஜந்தன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

29/9 அதிகாரி ஒழுங்கை.
பருத்தித்தறை வீதி.
40000 கோப்பாய்.

தகவல்:
சுந்தரேஸ்வரி (சகோதரி) 077 982 2292
பிரபா (மகன்) +1 4169383768
நிஜந்தன் (பெறாமகன்) 076 335 3029
நித்யா (மருமகள்) 076 246 9865

# மரண அறிவித்தல்



## திருமதி. பவளசேனை சொக்கநாதன் (பவளம்)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், பாலன் வளவு, தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட பவளசேனை சொக்கநாதன் அவர்கள் நேற்று (04.07.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சொக்கநாதன் (ஓய்வுபெற்ற PWD ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யுவதி, யோகநாதன் மற்றும் யோகாம்பாள், யோகேஸ்வரன், கணேஸ்வரன், யோகேஸ்வரி, காலஞ்சென்ற கணேஸ்வரி மற்றும், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் புஷ்பமலர், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் கமலவேணி, மனோகரன், சாந்தகுமாரி காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் ஞானேந்திரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பொன்னம்பலம், மகேஸ்வரி, ஆகியோரின் அன்பு சகோதரியும், ஜீவப்பிரதாப் - சயந்தினி, உமா - வைகுந்தன், பிரபாலினி - மயூரன், தரங்கினி - தனுசன், நிஸ்கலாஜினி - நீதன், வைஷ்னவி - கஜனன், காலஞ்சென்ற நித்தியா மற்றும் பிரதீப் - ஜனுசிதா, சர்மிளா - ஸ்ரெபான், பிரகலாதன் - வைஷ்னவி, கௌதமி - பிரதாபன், வாசன், நிதர்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அஜின், ஜஸ்விந்தன், அஜிசா, நிருசி, சக்தி, சுருதி, அகரன், இலக்கியா, அயன், அனிகா, அர்னிகா, அக்சரா, அத்விக் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.07.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை இந்து மயானத்தில் இடம்பெற்றது இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மலர்வு 23.02.1923

உதிர்வு 04.07.2025

பாலன் வளவு.
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்: குடும்பத்தினர்
021 205 2350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமராட்சியில்...

னர் மற்றும் மருதங்கேணி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ள நிலையில், மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ம-113-66-20-26)

# சொத்துவிவரம் வழங்க தயங்கும் 90 எம்.பி.க்கள்

கொழும்பு, ஜுலை 5

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 90 பேர் இன்னமும் தங்கள் சொத்து விவரங்களைச் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துவிவரங்கள் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன் சொத்துவிவரங்களை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவேண்டும். ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த விவரங்களைக் கையளிப்பதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். (ஏ-75)



# விஞ்ஞான வினாடிவினாப் புதிர்கள்: வவுனியாவில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 5

யாழ். வடமராட்சி பொலிகண்டியைச் சேர்ந்த வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர் சிவலிங்கம் சபேசனின் 'விஞ்ஞான வினாடி வினாப் புதிர்கள்' நூல் வெளியீடு அண்மையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பலநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி குணரட்ணம் கமலகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் ஆய்வுரையை விரிவுரையாளர் எஸ்.சுகுமார் ஆற்றினார். நூலாசிரியரான சிவலிங்கம் சபேசன் ஏற்புரையை வழங்கினார். (ம)

## பதவி...

என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்ததாவது:-

துறைமுகத்தில் இருந்து பரிசோதனையின்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆயுதங்களே வந்தன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கொள்கலன் விவகாரம் தொடர்பில் விசாரணைக்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. விசாரணையின்றி அவை விடுவிக்கப்பட்டமை தவறு என அந்தக் குழு கண்டறிந்துள்ளது. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

323 கொள்கலன்களில் என்ன இருந்தன என்பதை துறைக்கு பொறுப்பான அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல அமைச்சர் பிமல் ரத்நாயக்க அல்லது துறைக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் பதவி விலகவேண்டும்- என்றார். (அ-ம-44)

## தொடர்ச்சியாக...

**சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி மீதான இரண்டாம்கட்ட அகழ்வின் 9ஆம் நாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சிறுவர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படும் மூன்று என்புச் சிதிலங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.**

இதன்படி, இதுவரை 42 என்புச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 37 என்புச் சிதிலங்கள் அகழ்ந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளன. இன்றையதினம் 10ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன. நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர். நேற்றையதினம் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கத்தினரின் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன் உட்பட இருவர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழில்...

அறிக்கையில் உள்ளதாவது:-

நைஜீரியாக் கப்பலொன்றில் கடந்த 6 மாதங்களாகப் பணியாற்றிவிட்டு, விமானம் மூலம் இலங்கைக்குத் திரும்பியிருந்த இளைஞரொருவர் உடற்சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனாவில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மலேரியாக் காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். அவர் தற்போது உரிய மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியா, ஆபிரிக்கா நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியாத் தொற்றுத் தொடர்பில் அவதானத்துடன் இருப்பது அவசியம். இலங்கையில் மலேரியாக் காய்ச்சல் முற்றாக இல்லாது செய்யப்பட்டுள்ள சூழலில் வெளிநாட்டில் இருந்து வருவோருக்கு இவ்வாறு தொற்று ஏற்படுவது மிகவும் ஆபத்தானது - என்றுள்ளது. (அ-ம-26)

## காய்ச்சலால்...

குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு நேற்றுமுன்தினம் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, குழந்தையின் தாயார் 'பனடோல் சிரப்' கொடுத்துள்ளார். நேற்றும் குழந்தை நீண்டநேரமாக அழுதுவிட்டு திடீரென மயக்கமடைந்துள்ளது. பின்னர் அச்சுவேலி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இறப்புக்கான காரணங்கள் உறுதிப்படுத்தப்படாத நிலையில், உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## 'ஹைஏஸ்'...

இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## கல்விச்...

பட்டுள்ளது. அந்த மாணவனும் பணத்தை வழங்கியுள்ளான். எனினும், நேற்றையதினம் குறித்த மாணவனை அழைத்துச்செல்லமுடியாது என்று சுற்றுலாவை ஏற்பாடுசெய்த ஆசிரியர்கள் தெரிவித்ததுடன், அவரை விட்டுவிட்டே பயணத்தைத் தொடர்ந்துள்ளனர்.

இதையடுத்தே, அந்த மாணவன் தனக்கு நீதிகோரி வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டான். இதனையடுத்து வலயக்கல்வி அதிகாரிகள் பாடசாலை நிர்வாகத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, மாணவனை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கியுள்ளனர். இதையடுத்தே, மாணவனின் போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## தேரின்...

**மின்னிணைப்பு வயரில் தேரின் கலசம் சிக்கியதாலேயே அது கழன்று வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.** முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-35)

## மக்களின்...

யும் ராஜபக்சக்கள் மீது சுமத்திவிட்டு, தமது கைகளைக் கழுவிக்கொள்ளும் விதத்திலேயே அரசாங்கத்தின் செயற்பாடு உள்ளது. இன்று மக்களின் வாழும் உரிமை கேள்விக்குறியாக மாறியுள்ளது. மனித உரிமைகள் ஆணையாளரை நாட்டுக்கு அழைத்துவந்தனர். பழைய புதைகுழிகளை தோண்டுவது தொடர்பில் கதைக்கின்றனர். ஆனால் நாட்டு மக்களின் வாழும் உரிமை மற்றும் பொருளாதார உரிமைகளைக்கூட உறுதிப்படுத்த முடியாத நிலையிலேயே அரசாங்கம் உள்ளது.

அதேவேளை, தமது அரசியல் மேடையில் இருந்தவர்களுக்கு அரசாங்க நிர்வாகத்துறையில் உயர்பதவிகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இப்படியான அரசியல் நியமனங்களால் அரச நிர்வாகப்பொறிமுறை சீர்குலைந்துள்ளது' - என்றார். (அ-ம-44)

## பேருந்து...

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட பேருந்து, சிலாபம் - புத்தளம் பிரதான வீதியில் சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபத்துக்கு உள்ளானதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

சிலாபம் தெதுரு ஓயா பாலத்துக்கு அருகாமையில் மரமொன்றுடன் மோதியே அந்தப் பேருந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த பேருந்துச் சாரதி உட்பட 15 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## இன்று...

**1987ஆம் ஆண்டு ஜுலை 5ஆம் திகதி விடுதலைப்புலிகளின் முதலாவது தற்கொலைப் போராளியான கப்டன் மில்லரால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.** அவரின் நினைவாகவே ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் 5ஆம் திகதி தமது உயிரையே துச்சமெனக் கருதி ஆகுதியாகிய கரும்புலிகள் தினம் விடுதலைப்புலிகளால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. போர் முடிந்த பின்னரும் இந்த நாளில் படையினர் தீவிர சோதனைகளையும் பாதுகாப்புக் கெடுபிடிகளையும் முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர சொன்னதொன்று நடப்பதோ வேறொன்று!

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 5
சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிடிக்கை மறுசீரமைக்கப்படும் என உறுதியளித்திருந்த ஜனாதிபதி, அதனைச் செய்யாது, ஐ.எம்.எப். இன் நிபந்தனைகளை நிறைவேற்றி வருகின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,
சர்வதேச நாணயநிதியத்துடன் ரணில் அரசு செய்துகொண்ட ஒப்பந்தம் நாட்டுக்கு ஏற்புடையது அல்ல. தாம் ஆட்சிக்கு வந்த பிறகு புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார்.

எனினும், தற்போது ஒப்பந்தத்தை மாற்றமுடியாது, அவ்வாறு செய்தால் அது பிரச்சினைக்கு வழிவகுக்கும் எனக்கூறி நடைமுறையில் இருந்த ஒப்பந்தமே முன்னெடுத்து செல்லப்படு கின்றது.
சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படாததால் 4ஆம் கட்ட கடன் தவணை இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அது விடுவிக்கப்பட்டுள்ளது. திடீரென இது எப்படி சாத்தியமானது? எரிபொருள் விலையேற்றம், மின் கட்டணம் அதிகரிப்புப் போன்ற சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட தால்தான் கடன் கிடைக்கப்பெற்றுள்ளது - என்றார்.
(ச-44)

## பஸ் விபத்தில் 15 பேர் காயம்

குடுகலப் பகுதியில் இருந்து வத்தேகம வழியாகக் கண்டி நோக்கி பயணித்த இ.போ.ச. பஸ் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சுமார் 15 பேர் காயமடைந்துள்ளனர்.
பஸ் சென்றுகொண்டிருந்தபோது, சாரதியின் இருக்கைக்கு அருகிலுள்ள கதவு திடீரெனத் திறந்ததாகவும், சாரதி அதைப் பிடிக்க எத்தணித்தபோது, பஸ் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.
(ச-இ)

### தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526
(CS/58593) J-1

### வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் புடவைக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்கள் விரும்பத்தக்கது.
வயதெல்லை 20 - 25
தொடர்புகளுக்கு: 077 310 0860
(CS 58768) E-1

### பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு கீழ் காணும் நிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.
தகுதியுடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

01. கொத்து றொட்டி தயாரிப்பவர்
02. பிறட்றைஸ் தயாரிப்பவர்
03. றொட்டி வேலை செய்பவர்
04. சமையலாளி
05. சமையல் உதவியாளர்
06. உணவு பரிமாறுபவர்

தொடர்பு: 077 649 1027

### மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.



"நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 535 7803

### சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 075 728 6051

### வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கிவரும் உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- றொட்டி போடுபவர்
- சமையலாளர்

075 144 3303, 076 848 6077

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை பவனராஜ்



விளானை, களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பவனராஜ் அவர்கள் கடந்த (02.07.2025) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் விளானை, களபூமி, காரைநகரைச் சேர்ந்த சண்முகம் சங்கரப்பிள்ளை - யோகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், பகீரதன், பவித்திரா, பவக்குமரன் ஆகியோரின் சகோதரனும், கோகுலன் அவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் முருகானந்தம், சந்திரமலர், சாந்தினிதேவி (சமுர்த்தி உத்தியோகத்தர் - காரைநகர்) ஆகியோரின் பெறாமகனும், மகேஸ்வரி, சாந்தினி, சாந்தமலர் (சுவிஸ்), நேசமலர் (London), பவானி (நெதர்லாந்து), நாகராணி, தனபாலசிங்கம் (நெதர்லாந்து), பூபாலசிங்கம், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் இரத்தினராசா, சிவானந்தன் ( E.S.P நந்தன்), சிவலோகநாதன் (சுவிஸ்), சிவச்செல்வன் (London) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம் 13.06.2002 | மறைவு 02.07.2025

விளானை,
களபூமி, காரைநகர்.

தகவல் :
குடும்பத்தினர்
077 271 9115

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org